1970 நவம்பர் 30]

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்த விவசாயிகளுக்குப் பயன் அளிக்கக்கூடிய திட்டத்திற்கு தனியாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது நீர்ப்பாசன திட்டத்திற்கான நிதியிலிருந்தே இது ஏற்பாடு செய்யப்படுகிறதா? இதற்காக தனியாக நிதி ஒதுக்கி அதற்காக ஒரு 'டார்கெட்' வைப்பதற்கு ஏதாவது யோசனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது இருக்கிற நிலையில் தனியாக நிதி இல்லை. ஆனால் சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் எஸ்.எம்.ஐ.பி-ன் மூலம் நிதி ஒதுக்கும் பிரச்சினை எழவில்லை. தனிப்பட்ட திட்டங்களுக்கு அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது.

Jain temple at Vijayamangalam

* 77 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR; and THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the Jain temple in Vijayamangalam in Erode Taluk has been taken over by the Department; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) & (இ) ஆம். ஈரோடு வட்டம் விஜயமங்கலத்தில் ஸ்ரீ சந்திரப்பிரபா தீர்த்தங்கரர் கோயில் என வழங்கும் சமணக் கோயிலின் முறைகேடான நிர்வாகம் காரணமாக 1959-ம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின் விதித்துறைகளையும் அதன்கீழ் வகுக்கப்பட்ட விதிகளையும் அரசு அண்மையில் அந்தக் கோயிலுக்கு நீட்டித்துள்ளது.

திரு. கே. விநாயகம் : சார், இந்தச் சமணர்கள் வழிபடுகிற இந்த விஜயமங்கலத்தில் உள்ள பிரசித்திபெற்ற ஆலயத்தின் சிறப்புகள் யாவை? அந்த ஆலயத்திற்குத் தர்மகர்த்தாக்களை நியமித்து விட்டார்களா? அவர்களிலே யார் யார் எந்த எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, அது சம்மந்தமான தகவல் என்னிடத்திலே இல்லை. அதற்கு சீனிவாச அய்யர் என்ற குருக்கள்தான் டிரஸ்டியாக இருந்திருக்கிறார். அதற்கு முன்னாலே எண்டோமெண்டிலே எடுக்கப்படாத காரணத்தினாலே டிரஸ்டிகள் நியமிக்கப்பட்டார்களா அல்லது இல்லையா என்று தெரியவில்லை. இப்போது அந்தச் சட்டத்தை நீட்டித்து இருக்கிற காரணத்தினால் டிரஸ்டு போர்டு அமைப்பதற்கான அவசியம் இனிமேல் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. விநாயகம் : இந்த ஆலயத்திற்கு இப்போது என்ன வருமானம் ஆண்டுதோறும் வருகிறது? இனிமேல் டிரஸ்டி போடுவார்களா? போட்டால் எந்த அரசியல் கட்சியையும் சேராதவர்களைப் போடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அந்தக் கோயிலே இப்போழுதுதான் எண்டோமெண்ட் கண்ட்ரோலிலே எடுக்கப் பட்டிருக்கிறது. அதற்கு முன்னாலே ஏறத்தாழ 45 ஏக்கர் 98 சென்ட் சொத்து அங்கே இருந்ததாக இருக்கிறது. அந்தச் சொத்துக்கள் பராதீனம் செய்யப்பட்டுவிட்டன என்ற காரணத்தினாலே அந்தக் கோயிலை எண்டோமெண்ட் கண்ட்ரோலுக்குக் கொண்டுவந்திருக் கிறார்கள். இனிமேல்தான் வருமானத்தைப் பார்க்கவேண்டும். அந்தக் குருக்கள்தான் வருமானம் இல்லையென்றும் அதனால் பூசை செய்யமுடியவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். இனிமேல் தான் அதனுடைய நிலமைகளையெல்லாம் பார்க்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்சி வித்தியாசம் இல்லாமல் போடப்படுமா என்று கேட்டார்கள். கட்சி வித்தியாசம் எல்லாம் பார்த்துக் கொண்டு போடுவதாகத் தெரியவில்லை. நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு அப்படி இருந்திருக்கலாம், ஆகவேதான் அப்படிச் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். இப்பொழுது அப்படியில்லை. இருந்தபோதிலும் அது கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Administration of Trusts

* 78 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to appoint a High Court Judge to enquire into the administration of Trusts; and

(*b*)) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. வினாயகம் : முன்பு ஒரு முறை கேள்வி நேரத்திலே இந்த டிரஸ்டிகள் விவகாரத்திலே நல்ல ஒரு குழுவையமைத்து எந்த எந்த டிரஸ்டுகள் எப்படி நடக்கின்றன இந்த நாட்டிலே, அது பற்றிக் கவனிக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்களே அந்த வாக்குறுதிப்படியாயினும் தமிழ் மாநிலத் திலே எல்லா டிரஸ்டுகளும் நல்ல முறையிலே நடக்கின்றனவா அல்லது தவறான முறையிலே நடக்கின்றனவா என்று ஆராய் வதற்காக இனிமேலாவது ஒரு குழுவை அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

மரம் வளர்ப்புத் திட்டம்

* 79 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

ஆறு, கால்வாய், ஏரிக்கரைகளில் மரம் வளர்ப்புத் திட்டத்தை அமுல் படுத்த 1970-71ம் ஆண்டில் தமிழ்நாடு அரசு எந்த வகை யில் செயல்படுத்த உள்ளது?